# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண். **14/2016** நாள். **09.09.2016**

### மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கையாளுவதற்கான பயிற்சி

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தல் **2016**–ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்குப்பதிவின்போது பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இடர்பாடின்றி இயக்குவதற்கான பயிற்றுநர் பயிற்சி 'பெல்' (BEL) நிறுவன தொழில்நுட்ப அலுவலர்கள் திரு.எஸ்.டி.செல்வகுமார் மற்றும் திரு.எஸ்.சந்திரசேகர் ஆகியோர்களால் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் கூட்ட அரங்கில் **09.09.2016** அன்று இரண்டு கட்டமாக நடத்தப்பட்டது. இப்பயிற்சியை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் துவக்கி வைத்தார். முதன்மை தேர்தல் அலுவலர்கள் திரு.ஜா.சம்பத் (ஊராட்சிகள்), டாக்டர்.மா.இளங்கோவன் (நகராட்சிகள்) ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், இப்பயிற்சியில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அலுவலகங்களில் பணிபுரியும் **104** அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

இரா. இளைசுந்தர்
09/09/16
மக்கள் தொடர்பு அலுவலர்